بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# ஜுமுஆ பேருரை

April 11
2014



அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)*

**மொழியாக்கம் : முஅல்லிம் M. நிஸாமுத்தீன் சாஹிப்**

## குத்பா இல்ஹாமியா – இல்ஹாமிய சொற்பொழிவு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. إِيَّاكَ نَعْبُدُ

وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

இன்று நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு 11 ஏப்ரல் 1900 அன்று இறங்கிய அடையாளம் தொடர்பாகக் கூறுவேன். இன்றைய தேதியில் இந்த அடையாளம் வெளிப்பட்ட நாள் என்று கூறலாம். அன்று அரபி மொழியில் ஒரு குத்பா அன்னாரது நாவிலிருந்து இறைவனது சிறப்பான உதவியால் வெளி வந்தது. இன்னும் சொல்வதென்றால், அது இல்ஹாமின் மூலம் வந்தது என்று கூறலாம். இல்ஹாம் மூலம் வந்த அடையாளமாகும். எனவே அதன் பெயர் குத்பா இல்ஹாமியா என்று வைக்கப்பட்டது. இந்த இல்ஹாமி குத்பாவை அப்போது 200 பேர் வரை கேட்டார்கள்; பார்த்தார்கள்.

இன்று ஜுமுஆவாக இருப்பதால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் தொடர்புடைய மகத்தான அடையாளத்தைக் கூற வேண்டும் என்று ஒருவர் கவனமூட்டினார். ஏனெனில் குத்பா இல்ஹாமியா என்ற பெயரைக் கேட்டிருந்தாலும், அது நூல் வடிவில் வந்துள்ளது என்ற போதிலும், அதன் வரலாறு, பின்னணி, அது குறித்தக் கருத்துக்களைத் தெரியாத அஹ்மதிகளும் இருக்கின்றனர். அது எனக்கு வியப்பாகவும் இருந்தது. அதாவது, சிலர் அவ்வாறும் இருக்கின்றனர். குத்பா இல்ஹாமியா என்றால் என்னவென்றே அவர்களுக்குத் தெரியாது.

ஒவ்வொரு அஹ்மதியும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த அடையாளங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஆதரவாக அல்லாஹ் காட்டினான். அவை நமது ஈமானை வலுவூட்டுகின்றன. அஹ்மதிய்யத்தின் எதிரிகளின் வாயை அடைப்பதற்குத் தேவையான அம்சங்களை ஆயத்தம் செய்து தருகின்றன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைக்கான ஆதாரத்தை அவை நமக்கு தருகின்றன. குறிப்பாக குத்பா இல்ஹாமியா போன்ற அடையாளம் ஓர் மகத்தான அடையாளங்களுள் ஒன்றாகும். இது பெரும் பெரும் உலமாக்களின் வாயை அடைத்து விட்டது. எவ்வாறிருப்பினும், நான் கூறியது போன்று சுருக்கமாக இதன் வரலாற்றுப் பின்னணியைக் கூறுவேன். அதுபோன்று இந்த குத்பாவின் சில வார்த்தைகளையும் அல்லது சில சிறிய மேற்கோள்களையும் எடுத்து வைப்பேன். இந்த இல்ஹாமிய குத்பாவின் மகத்துவம் மற்றும் உண்மை நிலையை இதனைப் படிக்கும் போதே தெரிந்து கொள்ள முடியும். எனினும் நான் சில சொற்றொடர்களை எடுத்து வைப்பேன். அவற்றை நான் படிப்பதற்காகத் தேர்ந்தெடுத்துள்ளேன். அவற்றின் மூலமும் அதன் மகத்துவத்தையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அந்தஸ்தையும் அறிய முடிகிறது. தத்கிராவில் குத்பா இல்ஹாமியா சேர்க்கப்படாததன் காரணம் அது ஒரு தனி நூலாக வெளி வந்தது தான். ஆனால் இவ்விஷயத்தில் எனக்கு மாற்றுக் கருத்து உண்டு. இனி தத்கிரா நூலை அச்சிடும் போது, ஏதாவது மொழியில் வெளியிடப்படும் போது சம்பந்தப்பட்ட துறை என்னிடம் கேட்க வேண்டும்.

குத்பா இல்ஹாமியாவின் பின்னணி என்னவெனில், பத்ர் பத்திரிகை எழுதியுள்ளது. அல் ஹகமிலும் எழுதப்பட்டுள்ளது அல்லது ஜமாஅத் அறிவிப்புகளிலும் உள்ளது. யவ்முல் அரஃபாத் – அரஃபாத் நாளன்று அதாவது,

ஹஜ்ஜுப் பெருநாளைக்கு முன் தினம் காலையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கடிதம் மூலம் ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் சாஹிபிடம் தகவல் தெரிவித்தார்கள். நான் இன்று இரவின் ஒரு பகுதியில் எனக்காகவும், எனது நண்பர்களுக்காகவும் துஆவில் கழிக்க விரும்புகிறேன். எனவே, நான் துஆ செய்யும் போது நினைவில் வருவதற்காக, இங்கு தங்கியிருக்கும் நண்பர்களின் பெயர், முகவரிகளை எழுதி என்னிடம் அனுப்புங்கள். இதனை செயல்படுத்தும் பொருட்டு அவர்களின் பெயர் பட்டியல் ஹுஸூருக்கு அனுப்பப்பட்டது. அதன் பிறகும் சிலர் வெளியிலிருந்து வந்தனர். அவர்களும் சந்திப்பிற்காகவும், துஆவிற்காகவும் உருகி வேண்டினர். துண்டுச்சீட்டு அனுப்பினர். ஹுஸூர் மீண்டும் தகவல் அனுப்பினார்கள். என்னிடம் மேலும் சீட்டுகள் அனுப்ப வேண்டாம்; அதனால் தொந்தரவு ஏற்படுகிறது. இஷாவுக்கு ஹுஸூர் வந்தார்கள். மக்ரிப், இஷா ஜம்அ செய்து தொழப்பட்டது. பிறகு ஹுஸூர் அவர்கள் சென்று விட்டார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள், இன்று நான் இரவில் துஆவில் கழிப்பேன் என்று இறைவனிடம் வாக்களித்து விட்டேன். எனவே வாக்கு மீறி விடக்கூடாது என்று கூறினார்கள். பிறகு ஹுஸூர் அவர்கள் சென்று, துஆவில் மூழ்கி விட்டார்கள். மறுநாள் ஹஜ்ஜுப் பெருநாள் அன்று மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் உள்ளே சென்று சொற்பொழிவாற்றுமாறு குறிப்பாக வேண்டுகோள் விடுத்தார்கள். அப்போது ஹுஸூர், இறைவனே எனக்கு கட்டளையிட்டுள்ளான். மக்கள் கூட்டத்தின் முன் சிறிது அரபி சொற்றொடர்களை ஓத வேண்டும் என்று இரவில் எனக்கு இல்ஹாம் வந்தது. வேறொரு மக்கள் கூட்டத்தில் பேச வேண்டும் என்று நினைத்து விட்டேன். ஒருவேளை அது இந்த ஈது நாளின் கூட்டம் தான் போலும்! என்று கூறினார்கள்.

பிறகு அறிவிப்புகளில் இதுவும் உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அரபியில் குத்பா ஓதத் தயாரானதும் ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப், ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் சாஹிப் ஆகியோருக்கு, அவர்கள் இருவரும் அருகில் இருந்து அதனை எழுத வேண்டும் என்று கட்டளையிட்டார்கள். இரு மவ்லவி சாஹிப்களும் தயாரானதும் ஹுஸூர் யா இபாதல்லாஹ் என்ற சொல்லுடன் அரபி குத்பாவை ஆரம்பித்தார்கள். குத்பாக்களுக்கிடையில் ஹஸ்ரத் அக்தஸ் அவர்கள் இதுவும் கூறினார்கள். இப்போது எழுதுங்கள். அதாவது கூடவே எழுதிக்கொண்டே வாருங்கள். சொல் புரியா விட்டால் இப்போதே கேட்க வேண்டும். ஹஸ்ரத் அக்தஸ் அவர்கள் குத்பா ஓதி விட்டு உட்கார்ந்ததும், பெரும்பாலான மக்களின் வேண்டுகோளின்படி மவ்லானா மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அதன் மொழியாக்கத்தைக் கூற எழுவதற்கு முன், ஹஸ்ரத் அக்தஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நேற்று அரஃபாத் நாளன்று பெருநாள் இரவில் செய்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதன் அடையாளமாக அல்லாஹ் இந்த குத்பாவை ஆக்கினான். நான் இந்த குத்பாவை அரபி மொழியில் தன்னிச்சையாக ஓதும் போதும் எல்லா துஆக்களும் ஒப்புக் கொள்ளப்பட்டதாக உணர்ந்தேன். அல்ஹம்துலில்லாஹ்! எல்லா துஆக்களும் அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இது அன்னார் கூறியதாகும். உருதுவில் மொழிபெயர்ப்பு தொடங்குகிறது. மவ்லானா அப்துல் கரீம் சாஹிப் தர்ஜுமாவைக் கூறிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உணர்ச்சி பொங்க நன்றி ஸஜ்தாவில் வீழ்ந்தார்கள். ஹுஸூடன் கூடியிருந்தோர் அனைவரும் ஸஜ்தாவில் வீழ்ந்தனர். ஸஜ்தாவிலிருந்து தலை உயர்த்தியவாறு ஹுஸூர் கூறினார்கள்: இப்போது சிவப்பு எழுத்துக்களில் ' مُبارک – *முபாரக்*' என்று எழுதியிருப்பதைக் கண்டேன். இது ஏற்றுக் கொள்ளப்பட்டதன் அடையாளமாகும். அல்ஹகமில் இந்த அறிக்கை உள்ளது.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது நூலான நுஸூலுல் மஸீஹ் –ல் எழுதியுள்ளார்கள்:***

ஈதுல் அழ்ஹாவின் அதிகாலையில் எனக்கு, ' کچھ عربی میں بولو – *சிறிது அரபியில் பேசுக*' என்ற இல்ஹாம் வந்தது. இந்த வகையில் அதிகமான நபருக்கு இது குறித்து தகவல் தரப்பட்டது. இதற்கு முன்னர் நான் அரபி மொழியில் எந்த சொற்பொழிவும் ஆற்றியதில்லை. ஆனால் நான் அன்று ஈது குத்பாவை அரபியில் ஓதுவதற்காக நின்றேன். அல்லாஹ் பொருள் பொதிந்த சொல் வளமும் பொருள் வளமும் நிறைந்த அரபி வார்த்தைகளை எனது நாவிலிருந்து வெளிவரச் செய்தான். அவை குத்பா இல்ஹாமியாவில் எழுதப்பட்டுள்ளது. அது பல பகுதிகளைக் கொண்ட சொற்பொழிவாகும். அவை தன்னிச்சையாக வாய்மொழியாக ஒரே நேரத்தில் கூறப்பட்டவையாகும். இறைவன் அதற்கு அடையாளம் என்று பெயரிட்டான். ஏனெனில் அந்த வாய்மொழி சொற்பொழிவு இறைவனின் ஆற்றல் மூலம் வெளிப்பட்டது. அரபி மொழியின் வல்லுனர்கள் கூட இதுபோன்ற ஒரு சொற்பொழிவை இவ்வாறு தொடர்ந்து நாவின் வழியாக தர முடியும் என்று நான் உறுதியாக ஏற்றுக் கொள்ளமாட்டேன். அந்த சொற்பொழிவுக்கு அப்போது கிட்டத்தட்ட 150 பேர் சாட்சியாக இருந்தனர்.

***பிறகு, ஹகீகத்துல் வஹியில் அன்னார் கூறுகின்றார்கள்:***

(சற்று விரிவாக அதில் உள்ளது.) 11 ஏப்ரல் 1900 –ல் ஈதுல் அழ்ஹா நாளில் சுபுஹ் நேரத்தில் எனக்கு, '*இன்று நீர் அரபியில் சொற்பொழிவாற்றுக; உமக்கு அதற்கான ஆற்றல் தரப்பட்டுள்ளது.*' என்ற இல்ஹாம் வந்தது. பிறகு மேலும், كَلَامٌ أُفْصِحَتْ مِنْ لَدُنْ رَبٍّ كَرِيمٍ அதாவது இந்த வார்த்தைகளில் இறைவன் புறமிருந்து கருத்துச் செறிவுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த வகையில் அந்த சொற்பொழிவை மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் மர்ஹூம் மற்றும் மவ்லவி நூருத்தீன் சாஹிப், ஷேக் ரஹ்மத்துல்லாஹ், முப்தி முஹம்மது ஷாதிக் சாஹிப், மவ்லவி முஹம்மது அலி சாஹிப் M.A., மாஸ்டர் அப்துர் ரஹ்மான் சாஹிப், மாஸ்டர் ஷேர் அலி சாஹிப் B.A., ஹாஃபிஸ் அப்துல் அலி சாஹிப் போன்ற பல நண்பர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. நான் ஈது தொழுகைக்குப் பிறகு ஈது உடைய குத்பாவை அரபி மொழியில் ஓதுவதற்காக நின்றேன். இறைவன் அறிவான். எனக்கு மறைவான இடத்திலிருந்து ஆற்றல் வழங்கப்பட்டிருந்தது. கருத்துச் செறிவுமிக்க அரபியில் என் வாயிலிருந்து சொற்கள் உடனடியாக வந்து கொண்டிருந்தது. அது எனது ஆற்றலுக்கு முற்றிலும் அப்பாற்பட்டது. நான் நினைத்துப் பார்த்திருக்க முடியாது. அதன் சிறப்பு பல பகுதிகளைக் கொண்டிருந்தது. சொற்செறிவும் பொருட்செறிவும் கொண்டு அத்தகைய ஒரு சொற்பொழிவை முதலிலேயே எழுதி வைக்காமல் உலகில் எம்மனிதனும் இறைவனில் இல்ஹாமின் துணையின்றி எடுத்துரைக்க முடியாது.

குத்பா இல்ஹாமியா என்று பெயர் வைக்கப்பட்ட அந்த அரபி குத்பா மக்களுக்கு எடுத்து வைக்கப்பட்ட போது வருகை தந்திருந்தோர் எண்ணிக்கை 200ஐ நெருங்கி இருக்கும். ஸுப்ஹானல்லாஹ். அப்போது ஒரு மறைவான ஊற்று பொங்கி வந்தது. நான் பேசினேனா? அல்லது எனது நாவிலிருந்து மலக்கு பேசினாரா? என்று எனக்கு தெரியவில்லை. ஏனெனில் அந்த சொற்பொழிவில் எனது தலையீடு இல்லை என்று நான் அறிந்திருந்தேன். தன்னாலேயே ஒழுங்கமைக்கப்பட்ட வாக்கியங்கள் எனது வாயிலிருந்து வந்து கொண்டே இருந்தன. ஒவ்வொரு வார்த்தையும் எனக்கு ஓர் அடையாளமாக இருந்தது. அந்த அனைத்து வார்த்தைகளும் அச்சிடப்பட்டுள்ளது. அதன் பெயர் குத்பா இல்ஹாமியா ஆகும். அந்த நூலைப் படிக்கும் போது இது மனித ஆற்றலுக்கு உட்பட்டதா? இத்தனை நீண்ட சொற்பொழிவை யோசிக்காமல், சிந்திக்காமல் அரபி மொழியில் தயாரிப்பு ஏதுமின்றி வாய்மொழியாக நின்று பேச முடியுமா? என்பது தெரிய வரும். இது ஓர் அறிவிப்பூர்வ அற்புதமாகும். இறைவன் அதனைக் காட்டினான். இதற்கு இணையாக எவரும் ஒன்றை எடுத்து வைக்க முடியாது. இந்த அறைகூவல் இன்றுவரை நிலைநாட்டப்பட்டுள்ளது.

அஹ்மதிய்யா வரலாற்றில் இந்த குத்பாவைப் பற்றி மேலும் பல செய்திகள் எழுதப்பட்டுள்ளன. இந்த குத்பா ஒரு வலுவான அடையாளமாக இருப்பதாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே இதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது குத்தாம்களிடம் அதனை மனனம் செய்யுமாறு அறிவுறுத்தினார்கள். அதனை செயல்படுத்தும் பொருட்டு சூஃபி குலாம் முஹம்மது சாஹிப், ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப், முஃப்தி முஹம்மது ஷாதிக் சாஹிப், மவ்லவி முஹம்மது அலி சாஹிப் ஆகியோர் இன்னும் சில சஹாபிகளும் அதனை மனனம் செய்தார்கள். இன்னும் சொல்வதாயின், கடைசியில் குறிப்பிடப்பட்ட இரு சஹாபிகள் மஸ்ஜித் முபாரக்கின் மேல் தளத்தில் மக்ரிப் இஷாவுக்கு இடையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சபையில் அதனை ஒப்பித்தார்கள். ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் மிக மிக இலக்கண ஆர்வமுடையவர். அவர் இந்த குத்பாவின் மீது எத்துணை பேரார்வம் கொண்டவராக இருந்தார் என்றால், பலமுறை அதனை சொல்லிக் கொண்டேயிருப்பார்கள். அதன் சில சொற்களைக் கூறும் போது மயக்க நிலைக்கே சென்று விடுவார்கள். மவ்லவி சாஹிப் அவர்கள் போன்ற உயர்ந்த ஆலிம்களிடம் குத்பா இல்ஹாமியாவில் அருளப்பட்ட இறைவனுடைய இந்த அற்புத வார்த்தைகளைக் கேட்கும் போது பரவச நிலை ஏற்படும் என்பது இயல்பான ஒன்றுதான்.

ஆனால், இந்த வகையில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அறிவிப்பதாவது, இந்த சொற்பொழிவாற்றப்பட்ட நாளின் பகல் அஸ்தமம் ஆவதற்கு முன்பே 12 வயதிலும் குறைந்த குழந்தைகள் காதியானின் வீதிகளில் அந்த சொற்பொழிவின் சொற்களை மொழிந்தவாறு திரிந்தனர். இது அசாதாரண விஷயமாகும். இந்த சொற்பொழிவு ஆகஸ்டு 1901 –ல் வெளியிடப்பட்டது. ஹுஸூர் அவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் எழுத்தாளரைக் கொண்டு எழுதச் செய்தார்கள். பார்ஸியிலும், உருதுவிலும் தாமே மொழிபெயர்த்தார்கள். சொற்களின் இறுதி எழுத்தின் உயிர்க்குறிகளை தாமே இட்டார்கள். இந்த குத்பா இல்ஹாமியா என்ற நூல் 38 பக்கங்களில் முடிகிறது. அதன் முதல் அத்தியாயமாக இந்த சொற்பொழிவு அமைந்துள்ளது. அடுத்த அத்தியாயத்திலிருந்து கடைசி வரை வேறு சில படைப்புகளை இணைத்து ஹுஸூர் அவர்கள் வெளியிட்டார்கள். பிறகு முழு நூலின் பெயர் குத்பா இல்ஹாமியா என்று வைக்கப்பட்டது. இதன் முதல் பகுதி அசல் குத்பா இல்ஹாமியா ஆகும். இந்த நூல் வெளியிடப்பட்டதும் பெரும் அரபி அறிஞர்கள், வல்லுனர்கள் இந்த ஈடற்ற அரபிமொழி சொற்பொழிவைக் கேட்டு

திகைத்துப் போயினர். உண்மை இதுதான். இது முஹம்மதிய மஸீஹின் அறிவு ரீதியான அடையாளமாகும். இதற்கு ஈடாக குர்ஆனுக்குப் பிறகு வேறெதுவும் கிடைக்காது.

இந்த குத்பா இல்ஹாமியா பற்றி இரு கனவுகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அருளுக்குரிய கரங்களால் எழுதப்பட்டவை. தத்கிராவில் உள்ளன. 19 ஏப்ரல் 1900 –ன் நாட்குறிப்பில் மியான் அப்துல்லாஹ் சாஹிப் சனோரி கண்ட கீழ்க்கண்ட கனவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அப்துல்லாஹ் சாஹிப் சனோரி கூறுகிறார்: கனவில், சனோரி என்ற ஊரைச் சேர்நத் முன்ஷி குலாம் காதிர் மர்ஹூம் இங்கு வந்துள்ளார். அவரிடம் அன்னார் கேட்டார்கள். இந்த கூட்டத்தைப் பற்றி அப்பக்கத்திலுள்ள செய்தியைக் கூறுங்கள். அவர்கள் என்ன கூறுகிறார்கள்? அவர் கூறினார்: மிகவும் பரபரப்பாக உள்ளது. இவ்வாறு அவரது கனவை கூறுகிறார்கள். இந்தக் கனவு முற்றிலும் செய்யது அமீர் அலி சாஹிப் உடைய கனவைப் போன்று உள்ளது. அவர் பார்த்தார். அரபி குத்பா ஈது நாளில் ஓதப்பட்ட போது ஜனாப் ரஸூலுல்லாஹ் (ஸல்), ஹஸ்ரத் ஈஸா (அலை), ஹஸ்ரத் மூஸா (அலை), ஹஸ்ரத் கிழ்ர் (அலை) ஆகியோர் கூட்டத்தில் இருக்கிறார்கள். குத்பா கேட்கிறார்கள். இந்த ஆன்மீகக் காட்சி குத்பா நடக்கும் நேரத்தில் காட்டப்பட்டது. அவ்விடத்தில் இருந்தவாறு அவர் இதனை பார்த்தறிந்தார்கள்.

சில சஹாபாக்களின் தாக்கங்கள் இவ்வாறு உள்ளன. ஹஸ்ரத் ஹாஃபிஸ் அப்துல் அலி சாஹிப் அறிவிக்கின்றார்கள்: குத்பா இல்ஹாமியா நடந்த போது ஹுஸூருடைய குரலே மாறியிருந்தது. ஸியால்கோட் மாவட்டத்தின் செய்யத் ஷா சாஹிப் இல்ஹாம் பெறுபவர். அவர் அஹ்மதி தான். அன்னார் என் அருகில் இருந்தார்கள். அவர் மலக்குகளும் கேட்பதற்காக இங்கு வந்துள்ளார்கள் எனக் கூறிக் கொண்டிருந்தார்.

ஹஸ்ரத் மிர்ஸா ஃபஸ்லே பேக் சாஹிப் கூறுகிறார்கள்: ஈதுல் அழ்ஹா உடைய குத்பா இல்ஹாமியாவை ஹஸ்ரத் அக்தஸ் அவர்கள் மஸ்ஜித் அக்ஸாவின் பழைய பகுதியில் மஸீஹ் மவ்வூது காலத்தைய மெஹ்ராபின் உட்புறத்து வாசலுக்கு எதிரில் வெளிப்புற வாசலில் நின்று எனக்கு எதிரில் குத்பா கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அரபி மொழியில் ஓதினார்கள். அந்த வராண்டாவில் ஒரு ஆர்ச் இருந்தது. அங்கு அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

ஹுஸூர் ஒவ்வொரு சொல்லையும் மூன்று முறை கூறினார்கள். மவ்லவி ஹாஜி கலீஃபத்துல் மஸீஹ் அவ்வல், ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் ஆகிய இருவரும் எழுதிக் கொண்டிருந்தார்கள். ஹுஸூரிடம் இன்ன வார்த்தை س –இல் வருமா? ث –இல் வருமா? என்றோ அல்லது ع –ல் வருமா? ا –ல் வருமா? என்றோ கேட்டு எழுதினார்கள். அதாவது எழுத்துக்களைக் கூட கேட்டு எழுதினார்கள். சுருக்கமாக, இரு மவ்லவிமார்கள் கேட்டு எழுத்துக்களை சரிசெய்து கொண்டார்கள். ஹஸ்ரத் அதற்கு சரியான எழுத்தைக் கூறி திருத்தியிருந்தார்கள். முடிந்ததும் ஹுஸூர் அவர்கள் மவ்லவி அப்துல் கரீம் சாஹிபிடம் அதனை மொழிபெயர்த்து மக்களுக்கு கூறுங்கள் என்றார்கள். மவ்லவி சாஹிப் மொழிபெயர்த்துச் சொன்னார்கள். பிறகு பள்ளிவாசலில் நன்றி ஸஜ்தா செய்யப்பட்டது. சொற்பொழிவின் போதே ஸஜ்தா செய்யப்பட்டது.

மவ்லானா ஷேர் அலி சாஹிப் கூறுகிறார்கள்: இந்த ஈது உடைய குத்பா இல்ஹாமியாவை ஹஸ்ரத் சாஹிப் ஓதினார்கள். ஹஜ்ஜின் நாளின் சுபுஹ் வேளையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மவ்லவி சாஹிபிற்கு தூது அனுப்பினார்கள். ஒரு கடிதம் கொடுத்து விட்டார்கள். எவ்வளவு பேர் இருக்கிறார்களோ அவர்களது பெயரை எழுதி எனக்கு கொடுத்து விடுங்கள். நான் அவர்களுக்காக துஆ செய்வேன். மவ்லவி சாஹிப் அவர்கள், அவர்கள் அனைவரையும் தஃலீமுல் இஸ்லாம் ஸ்கூலில் (அப்போது மத்ரஸா அஹ்மதிய்யா இருந்த இடத்தில் இருந்தது.) மக்களின் பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டது. ஹஸ்ரத் சாஹிபிடம் அனுப்பினார்கள். ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் தமது முற்றத்தின் கதவை அடைத்து விட்டு துஆ செய்தார்கள். சிலர் பிறகு வந்து தமது பெயர்களைத் துண்டுச்சீட்டில் எழுதி கதவு வழியாக உள்ளே திணித்தனர். காலையில் ஹுஸூர் அவர்கள் ஈது தொழுகைக்காக மஸ்ஜித் முபாரக்கின் ஏணிப்படி வழியாக வெளியில் வந்தார்கள்.

அன்னார் கூறினார்கள்: இரவில் எனக்கு, 'அரபியில் சில வார்த்தை கூறுக' என்று இல்ஹாம் வந்தது. மவ்லவி அப்துல் கரீம் சாஹிப், மவ்லவி நூருத்தீன் சாஹிப் இருவருக்கும் தூது அனுப்பினார்கள். அவ்விருவரும் காகிதமும், போனாவும், மைக்கூடும் எடுத்து வருமாறு அழைக்கப்பட்டிருந்தனர். ஏனெனில் அரபியில் சில வார்த்தைகள் பேசுமாறு இல்ஹாம் வந்தது. தொழுகையை மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் தொழ வைத்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முதலில் உருதுவில் குத்பா கொடுத்தார்கள். அநேகமாக நாற்காலியில் அமர்ந்தவாறு கொடுத்தார்கள். குத்பாவுக்குப் பிறகு நாற்காலியில் அமர்ந்தவாறு அரபியில் கூறத் தொடங்கினார்கள். அப்போது அவர்களிடம் ஒரு சிறப்பான நிலை காணப்பட்டது. கண்கள் மூடியிருந்தன. ஒவ்வொரு வாக்கியத்தின் முதல் பகுதியில் அவர்களின் சப்தம் ஓங்கியும், பிறகு படிப்படியாக குறைந்தும் இருந்தது. எதிரில் இடதுபுறம் மவ்லவிமார்கள் எழுதிக்

கொண்டிருந்தனர். ஒரு சொல்லை இருவரில் ஒருவர் கேட்காத போது, ஹஸ்ரத் சாஹிப் அந்த சொல்லை கூறினார்கள். பிறகு அன்னார், ஏதாவது ஒரு சொல் கேட்கவில்லையென்றால் உடனே கேட்டு விடுங்கள். ஏனெனில் எனக்கும் கூட நினைவில்லாமல் போவது சாத்தியமே என்று கூறினார்கள்.

அன்னார் கூறினார்கள்: மேலிருந்து வந்து கொண்டே இருந்தது. நான் கூறிக் கொண்டே இருந்தேன். வருவது நின்றதும் நானும் நிறுத்தினேன். பிறகு ஹஸ்ரத் சாஹிப் அதனை எழுத வைப்பதற்கு சிரத்தை எடுத்தார்கள். தாமே உருது, பார்ஸி இரு மொழிகளில் மொழிபெயர்க்கவும் செய்தார்கள். 'திருக்குர்ஆன் மனனம் செய்யப்படுவது போன்று இதனை மக்கள் மனனம் செய்யுங்கள்' என்று கூறினார்கள். அதன்படி முப்தி முஹம்மது ஷாதிக் சாஹிப், மவ்லவி முஹம்மது அலி சாஹிப் ஆகியோர் அதனை மனனம் செய்து மஸ்ஜிது முபாரக்கில் வைத்து ஹஸ்ரத் சாஹிபிடம் முறைப்படி ஒப்புவித்தார்கள். அதன் பிறகு எனது சகோதரர் ஹாஃபிஸ் அப்துல் ரஹீம் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மவ்லவி சாஹிபிடம் இதுபற்றி கேட்டார்கள். மவ்லவி சாஹிப் பதில் கூறினார்கள்.

இது ஹஸ்ரத் சாஹிபின் சக்திக்கு அப்பாற்பட்டது என்று நாம் அறிகிறோம். அவர்களது இந்த வார்த்தையின் பொருள் இது இறைவனின் வார்த்தைகளாகும். ஹஸ்ரத் சாஹிபுடையதல்ல. ஹஸ்ரத் மியான் அமீருத்தீன் சாஹிப் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் சாஹிப் குத்பா இல்ஹாமியாவை நிகழ்த்தி விட்டு வெளியேறியதும் வழியில் வைத்து கூறினார்கள். நான் ஒரு வாக்கியத்தைக் கூறிக் கொண்டிருக்கும் போது அடுத்த வாக்கியம் என்னவாக இருக்கும் என்று எனக்கு தெரியாமல் இருந்தது. எழுதப்பட்டு என் முன் காட்டப்பட்டது. நான் படித்துக் கொண்டிருந்தேன். மிகவும் நிறுத்தி நிறுத்தி நிதானமாகப் படித்தார்கள்.

***மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப் பத்தால்வி எழுதுகிறார்கள்:***

ஸையத் அப்துல் ஹை சாஹிப் அரபு நாட்டிலிருந்து ஆய்வு செய்யும் நோக்கத்தில் காதியானிற்கு வந்து நீண்ட நாட்கள் தங்கியிருந்தார்கள். பிறகு அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்தார். அவர் எளியவனிடம் தாம் பைஅத் செய்த சூழ்நிலையை இவ்வாறு விளக்கினார்கள். நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஆழ்ந்த கருத்துச் செறிவுமிக்க படைப்புகளைப் படித்து விட்டு இந்த வார்த்தைகளை ஒருவர் இறை உதவி இல்லாமல் எழுதவே முடியாது என்பதை என் உள்ளத்தால் ஒப்புக் கொண்டேன். ஆனால் இந்த வார்த்தைகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடையது தான் என்று எனக்கு உறுதி ஏற்படவில்லை. மவ்லவி நூருத்தீன் சாஹிப் மற்றும் பிற உலமாக்கள் எனக்கு அது குறித்து உறுதி அளித்தாலும் கூட, அவர்கள் சாட்சி அளித்தார்கள் என்றாலும் கூட எனது ஐயங்களை அகற்ற முடியவில்லை. நான் பல்வேறு வழிகளில் இதற்கு ஆதாரத்தை தயார் செய்யத் தொடங்கினேன். இது யதார்த்தத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வார்த்தைகள் தாமா? இதில் பிறர் எவராவது ஒருவருடைய உதவி எதுவும் இல்லையா? இந்த வகையில் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அரபியில் சில கடிதங்களை எழுதி அதன் பதிலை அன்னாரிடமிருந்து அரபியிலேயே வாங்கினேன். பிறகு அதன் சொற்றொடர்களை ஆழ்ந்து படித்தேன். அதனை ஹுஸூருடைய படைப்புகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்தேன். இரண்டும் ஒன்றுபோல் உள்ளனவா? என்று பார்த்தேன். அப்போதும் எனக்கு வித்தியாசம் தென்பட்டது. அதற்குப் பதில் எனக்கு இவ்வாறு தரப்பட்டது. பொதுவான அரபி வார்த்தைகள் அல்லது கடிதங்களுக்கு பதில் எழுதும் போது அதில் முஃஜிஸாவின் அம்சமோ குறிப்பான இறை உதவியின் அம்சமோ இருக்காது. அரபி படைப்புகளை ஹுஸூர் அவர்கள் இறை கட்டளையின் கீழ் இறைவனது சிறப்பான உதவி கொண்டு எழுதினார்கள். எனவே அதன் நிறமே தனியாக இருந்தது. தனியாக இருக்கவும் வேண்டும். அதுவன்றி பொதுவான அறிவுடைமைக்கும் இறை உதவிக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும். இதனால் நான் காதியானில் இதனை ஆராய்வதற்காக தங்கியிருந்தேன். நானும் கூட இறை உதவியின் காட்சியே சுயமே கண்களால் காண்பதற்காக அவ்வாறு செய்தேன். இந்த வகையில் குத்பா இல்ஹாமியா இறங்கும் வேளை வந்தது. நான் எனது கண்களாலேயே இந்த இல்ஹாமிய, முஃஜிஸாவான வார்த்தைகளை இறங்கக் கண்டேன். எனது காதுகளால் கேட்டேன். எந்த உதவியும் இன்றி பட்டப்பகலில் ஒரு மனிதன் பொதுமக்கள் முன்பிலேயே கருத்துச் செறிவுமிக்க வார்த்தைகளைக் கூறுகிறார்கள். இவ்வாறு குத்பாவை கேட்ட பிறகு இதயம் விரிவடைந்து பைஅத் செய்தேன்.

இராணுவ வீரரான ஒரு நண்பர் கண்ணியத்திற்குரிய ஹாஜி அப்துல் கரீம் வேலை நிமித்தமாக எகிப்து பயணமானார். 1940க்கு முன்னால் நடந்திருக்கலாம். அங்கு தப்லீக் வேலை தொடர்ந்தார். அலி ஹுஸைன் சாஹிப் என்ற நண்பர் அஹ்மதியானார். அவரை அழைத்துக் கொண்டு ஹாஜி சாஹிப் எகிப்தியர், அரேபியர்களிடம் சென்று தப்லீக் செய்து வந்தார். அவர்களுள் ஒருவர் தந்தித் துறையில் (Telegraph department) கிளர்க் ஆக இருந்தார். பல நாட்கள் அவரது எண்ணங்கள் மாறிக் கொண்டே இருந்தன. பொதுவான மார்க்க விவகாரங்களில் கருத்தொன்றுபட்டு விட்டார். ஆனால் உம்மத்தி நபியை ஏற்கத் தயாராக இல்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)

அவர்கள் உம்மத்தி நபி என்று ஏற்கத் தயாராக இல்லை. அவர்கள் கிளர்க்குக்கு குத்பா இல்ஹாமியாவை கொடுத்தனர். பிறகு பல நாட்கள் அவரிடம் போகவில்லை. ஒருநாள் அவரது நண்பரின் கடிதம் வந்தது. அவர் ஹாஜி சாஹிப் உடைய விருந்திற்கு அழைத்திருந்தார். அங்கு சென்ற போது, நீங்கள் எனது பைஅத்திற்கான கடிதத்தை எழுதுங்கள் என்று கூறினார்.

ஹாஜி சாஹிப் கேட்டார். கத்மே நுபுவ்வத் விவகாரத்திற்கு தீர்வு கிடைத்து விட்டதா? அதற்கு அந்த நண்பர் கூறினார்: நான் அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் பெரிய ஆலிமை இரவு விருந்திற்கு அழைத்திருந்தேன். அவரிடம் இவ்வாறு சில இந்தியர்கள் எனக்கு தப்லீக் செய்தார்கள் என்றேன். ஹஸ்ரத் ஈஸா (அலை) இறந்து விட்டார்களாம். வரவேண்டிய ஈஸா இந்த உம்மத்திலுள்ள ஒருவர் தான். அவர் மஸீஹ் மற்றும் மஹ்தி ஆக வருவார். அதனை வாதிப்பவர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி ஆவார்கள். எனக்கு இம்மக்களது எல்லா சான்றுகளுடன் உடன்பாடு உண்டு. மிர்ஸா சாஹிப் உம்மத்தி நபி என்கிறார்கள். இதனைத்தான் நான் ஏற்கத் தயாராக இல்லை. நீர் மார்க்க அறிஞர். தாங்களே கூறுங்கள். எனது நிலைபாடு சரியா? இல்லையா? அந்த அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் ஆலிம் பதில் கூறினார். நான் மிர்ஸா சாஹிப் உடைய எழுத்துகளைப் படித்துள்ளேன். சில அஹ்மதிகளையும் கூட சந்தித்துள்ளேன். கருத்துப் பரிமாற்றம் செய்தோம். ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் செய்கின்ற நுபுவ்வத் வாதம் போன்று ஆயிரம் நபி வந்தாலும் கத்மே நுபுவ்வத் முறியவே செய்யாது. அதாவது அதனை ஒப்புக் கொண்டு விட்டார். கூறுகிறார்: உடனே நான், பாருங்கள்! நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்து விடுவேன். கியாமத் நாளில் அதற்கு நீர் தான் பொறுப்பாளர் ஆவீர் என்று கூறினேன்.

அஸ்ஹரி ஆலிம் கூறினார்: எனது பதில் இவ்விடத்திற்கு மட்டும் தான். பொது இடத்தில் வைத்து இதே கேள்வியை நீர் கேட்டீர் என்றால் உம்மத்தி நபியும் வர முடியாது என்றே கூறுவேன். மக்கள் முன்னால் என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. நீர் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் சேர விரும்பினால் எனது பொறுப்பில் நிச்சயமாக அதில் இணையலாம். என்னைப் பொருத்தவரையில் எனக்கு சில தடைகள் உள்ளன. நான் அஹ்மதியாகி விட்டால் நான் வேலையை விட்டு அகற்றப்படுவேன். உலகம் மிகைத்து விட்டது. இந்த எகிப்திய நண்பர் கூறுகிறார்: அஸ்ஹரி ஆலிமிடமிருந்து இந்த பதிலைக் கேட்டவுடன் உடனே ஜமாஅத்தில் இணைவதற்கு திட்டமாக முடிவு செய்து விட்டேன். குத்பா இல்ஹாமியா படிக்கத் தொடங்கினேன். படித்து முடித்து விட்டு தான் தூங்கினேன். இரவில் நான் கனவில் பார்த்தேன். ஹஸ்ரத் ஸெய்யதுனா அஹ்மது அல் மஸீஹ் (அலை) ஒரு பெரும் ஜமாஅத்துடன் எங்கோ போகிறார்கள். ஹுஸூர்! இவர்கள் யார்? இவர்களை எங்கு அழைத்துச் செல்கிறீர்கள்? என்று நான் கேட்டேன். இவர்கள் அவ்லியாவுல்லாஹ் ஆவர். இவர்கள் முஹம்மதிய்ய உம்மத்தில் எனக்கு முதலிலேயே உள்ளவர்கள். இவர்களை நான் ரஸூலின் அரசவைக்கு ஸியாரத்திற்காக கூட்டிச் செல்கிறேன். நான் காத்தமுல் அவ்லியா ஆவேன். எனது ஜமாஅத்தில் இருப்பவர்களைத் தவிர எனக்குப் பிறகு எந்தவொரு வலியும் இல்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு என்னைப் போன்று உம்மத்தி நபியைத் தவிர எந்தவொரு நபியும் இல்லை. இதன் பிறகு நான் விழித்தேன். எனது கத்மே நுபுவ்வத் விவகாரம் தீர்ந்து விட்டது. நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். இந்த அப்துல் கரீம் சாஹிப் கூறுகிறார்: இந்த சம்பவத்திற்குப் பிறகு நான் பைஅத் பாரத்தை நிரப்பி அப்போதே காதியானுக்கு அனுப்பினேன்.

ஒரு மிகப்பெரும் ஆலிமான ஷேக் அப்துல் காதிர் சாஹிப் மக்ரிபியுடன் ஹஸ்ரத் ஸய்யது வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிப் அவர்களுக்கு, இவரது அறிவு ஞானத்தின் காரணமாக ஆழிய நட்பு இருந்தது. **1916 –ல்** இருவருக்கும் முதல் சந்திப்பு நடந்தது. ஒருமுறை அல்லாமா மக்ரிபி அவர்கள் ஹஸ்ரத் ஸய்யத் வலியுல்லாஹ் சாஹிபிடம், 'நாம் இருவரும் நிழற்படம் எடுத்துக் கொள்வோம்; வாருங்கள்! திருக்குர்ஆன் மீது கை வைத்து நாம் நட்பை உறுதி செய்வோம்' என்று கூறினார்.

இந்த நட்பின் காரணமாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் டமாஸ்கஸ் சென்ற போது, மவ்லவி அப்துல் காதிர் சாஹிப் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களைச் சந்திக்க வந்திருந்தார். பல கேள்விகளை அன்னாரிடம் கேட்டார். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பதில் கொடுத்ததும், அவர் ஆலிமாக இருந்ததால் பிடிவாமும் இருந்தது. அதனால் அவர், 'நாங்கள் அரபி மொழி பேசுபவர்கள். திருக்குர்ஆனை நன்றாகப் புரிந்துள்ளோம். எம்மை விட வேறு எவர் குர்ஆனை புரிவார்?' என்று கூறினார். இவ்வாறான பேச்சு வார்த்தை நடந்தது.

***ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்:***

எங்களுக்கு எப்படி அகராதி தேவையோ அதுபோன்றே தான் உங்களுக்கும் அகராதி தேவை. திருக்குர்ஆனை இறைவனே நமக்கு கற்றுத் தந்தான்; புரிய வைத்தான். எங்களது மொழி உருதுவாக இருப்பதால் உருதுவில் பேசுவதற்கான திறமையைப் பெற்றுள்ளோம். அரபியில் பேசுவதற்கான வாய்ப்பு கிடைப்பதில்லை.

இருந்தபோதிலும், நாங்கள் உம்மை விட அதிகமாக அரபி மொழியில் கருத்துச் செறிவு உள்ளவர்கள் ஆவோம். ஹுஸூர் அரபியில் சில சொற்களை ஆவேசத்துடன் கூறினார்கள். அருகிலிருந்த ஸய்யது சாஹிபைப் பார்த்து மல்லவி அப்துல் காதிர், யதார்த்தத்தில இவர்களது பேச்சு மிகவும் கருத்தாழமிக்க சொற்களைக் கொண்டது என்றார். பிறகு மவ்லவி அப்துர் காதிர் சிறிது மென்மையைக் கடைபிடித்தவாறு உரையாடினார்.

உரையாடலின் இடையில் அல்லாமா மக்ரிபி சாஹிப் இவ்வாறு கூறினார்: ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபின் நூலில் மொழிப்பிழை உள்ளன. இதற்கு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் பதில் கூறினார்கள். உமக்கு ஆற்றல் இருந்தால் இப்போதே தவறுகளை அறிவியுங்கள். அவற்றை நூலாக எழுதி வெளியிடுங்கள். ஆனால் நினைவில் கொள்ளுங்கள். உம்மால் அதனை ஒருபோதும் செய்ய முடியாது. பேனாவை எடுத்தால் உமது எழுத்தாற்றல் அழிக்கப்பட்டு விடும். வேண்டுமானால், அவை குறித்து அறிவியுங்கள். உடனே கெஞ்சத் தொடங்கினார். உங்கள் வாதங்களை அரபு, எகிப்து நாடுகளில் பரப்பாதீர்கள். இதனால் கருத்து வேறுபாடு தான் அதிகமாகும். இந்த கருத்து வேறுபாடுகள் இப்போது உங்களுக்கு நஷ்டத்தையே விளைவிக்கும். வஹாபிகள் வேறு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறார்கள். தாங்கள் ஐரோப்பிய நகரங்கள், அமெரிக்க, ஆப்பிரிக்காவிலுள்ள குஃப்பார்கள், நஸாராக்களிடம் தப்லீக் செய்யுங்கள். நற்செய்தி அனுப்புங்கள். ஆனால் இங்கு இந்த கொள்கையின் பெயரைக் கூட கொண்டு வராதீர்கள். இறைவனுக்காக நான் கேட்கிறேன். முத்தம் கொடுத்தவாறும் கைகளைப் பிடித்தும் அவர் மீண்டும் மீண்டும் கெஞ்சினார். இந்தப் பகுதியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய போதனைகளைப் பரப்ப வேண்டாம். முபல்லிக்கை அனுப்ப வேண்டாம் போன்ற இவ்வாறான வேண்டுகோள்களை விடுக்கத் தொடங்கினார்.

பிறகு கூறினார்: அவர் ஒரு நல்ல மனிதர் தான் என்பது எனக்குத் தெரியும். இஸ்லாத்திற்காக ரோஷம் கொண்டிருந்தார்கள். ஆனால் அவரது நுபுவ்வத் கொள்கையை எம்மால் ஒப்புக் கொள்ள முடியாது. லாயிலாஹ இல்லல்லாஹ்வின் பக்கம் மட்டும் மக்களை ஒன்றுதிரட்டுங்கள். பிறகு இதற்கு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் பதில் வழங்கினார்கள். மிகவும் ஆக்ரோஷமான வார்த்தைகளால் பதில் தந்தார்கள். இந்த திட்டம் எங்களுடையதாக இருக்கும் எனில் விட்டு விடுவோம். ஆனால் இது இறை கட்டளையாகும். இதில் எங்களுக்கோ, ஸய்யதுனா அஹ்மதிற்கோ எந்த தலையீடும் இல்லை. இது இறைவனின் கட்டளையாகும். இதனைக் கொண்டு சேர்ப்போம். கண்டிப்பாக கொண்டு சேர்ப்போம். இவ்வாறு அந்த சம்பவம் செல்கிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பிறகு மவ்லானா ஜலாலுத்தீன் சாஹிப் ஷம்ஸ் அவர்களை சிரியாவுக்கு அனுப்பினார்கள். அக்காலத்தைய ஒரு சம்பவத்தைக் கூறியவாறு ஹஸ்ரத் ஸய்யது ஜெய்னுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிப் கூறுகிறார்கள். ஒருநாள் நானும் மவ்லானா ஷம்ஸ் சாஹிப் அவர்களும் சில நண்பர்களுக்கு அஹ்மதிய்யத்தைப் பற்றி கூறினோம். ஸெய்யது அப்துல் காதிர் மக்ரிபி சாஹிப் வந்தார்கள். உட்கார்ந்து எங்களது பேச்சுக்களைக் கேட்டார். உரையாடலுக்கிடையில் அவர் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை சந்தித்தது குறித்து குறிப்பிட்டார். மிகவும் ஏளனமாகப் பேசினார். ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹிடம் அவர் கூறிய அதே ஆலோசனையை மீண்டும் சொன்னார். அதாவது இங்கு தப்லீக் செய்யாதீர்கள் என்றார். மேலும் இல்ஹாம்களின் அரபி வார்த்தைகள் கூட சரியில்லை என்றார். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இல்ஹாமின் அரபி வார்த்தை கூட சரியில்லையாம்.

கூறுகிறார்: நான் குத்பா இல்ஹாமியாவை அவரது கையில் தந்தவாறு கூறினேன். இதனைப் படியுங்கள். இதில் என்ன அரபி தவறாக உள்ளது? அவர் உரத்த குரலில் படிக்கத் தொடங்கினார். ஓரிரு சொற்களைப் பற்றி இது அரபி சொற்களே அல்ல என்று கூறினார். மவ்லானா ஷம்ஸ் சாஹிப் அவர்கள் உட்கார்ந்தவாறு அங்கிருந்த அலமாரியில் இருந்து தாஜுல் உரூஸ் அரபி அகராதியை எடுத்தார்கள். அந்த சொல்லை எடுத்துக் காட்டினார்கள். கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. அந்த சந்தர்ப்பத்தை ஓர் அருளாகக் கருதியவாறு ஷாஹ் சாஹிப் கூறியதாகக் கூறுகிறார்கள். நீங்கள் பெரும் ஆலிம் என்று கூறப்படுகிறீர்கள். ஆனால் உமக்கு எனது சீடருக்குத் தெரிந்த அரபி கூட தெரியவில்லை. அந்நாட்களில் ஷம்ஸ் சாஹிப் அவர்கள் என்னிடம் ஆங்கிலம் கற்றுக் கொண்டிருந்தார்கள். எனவேதான் அவர்களை நான் எனது சீடர் என்று கூறினேன். உடனே அவருக்கு கோபம் வந்தது. நான் உம்மைப் பார்த்துக் கொள்கிறேன். என்ன ஆகும்? என்று நான் நாளை கூறுவேன் என்று கூறியவாறு எழுந்து சென்று விட்டார்.

ஷாஹ் சாஹிப் கூறுகிறார்: உட்கார்ந்திருந்த மக்கள் எனது பேச்சினால் சற்று ஈர்க்கப்பட்டனர். அவர்களிடம் நான் கூறினேன். நன்றாக இருங்கள். நானும் அங்கு படிப்பித்துள்ளேன். குத்பா இல்ஹாமியா படித்த பிறகு கருத்தைத் தெரிவிப்பதை விட்டு விட்டு உண்மையை ஒப்புக் கொள்ள வேண்டும் என்பது பற்றிய பேச்சு நடந்தது. கூறுகிறார்கள்: மறுநாள் ஷம்ஸ் சாஹிப் என்னிடம் கூறினார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் என்னிடம்

கூறினார்கள். அப்துல் காதிர் மக்ரிபியை எரிச்சலூட்ட வேண்டாம். அவரிடம் தொடர்பு வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் நீங்கள் அவரை கோபமூட்டி விட்டீர்கள். நான் கவலைப்பட வேண்டாம். சரிசெய்து விடலாம் என்று கூறினேன். காலையில் நாங்கள் அவரது வீட்டிற்குப் போனோம். வாசலைத் தட்டினோம். மக்ரிபி சாஹிப் வெளியில் வந்தார். வந்ததுமே என்னை கட்டித் தழுவினார். என்னை முத்தமிட்டார். நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்கிறேன். உங்களைப் பார்க்க நானே வர வேண்டும் என்று நினைத்தேன். உள்ளே வாருங்கள் என்று கூறினார். கஹ்வா குடியுங்கள். நேற்றிரவு எவ்வாறு கழிந்தது என்ற உங்களுக்கு காட்டுகிறேன் என்றார். நாங்கள் உள்ளே போனோம். அல்ஹகாயிக் அனில் அஹ்மதிய்யா என்ற பத்திரிகை இது வலியுல்லாஹ் சாஹிபின் பத்திரிகையாகும். அதன் பக்கம் சைகை செய்தவாறு கூறினார். இந்த பத்திரிகை என் கையில் இருந்தது. இந்த பத்திரிகைக்கு மறுப்பு எழுத வேண்டும் என்று உறுதியான எண்ணம் கொண்டேன். என்னிடம் ஹதீஸ் மற்றும் தஃப்ஸீர் நூல்கள் இருந்தன. அதனை மேஜையில் எடுத்து வைத்தேன். இஷா தொழுது விட்டு மறுப்பு எழுதத் தொடங்கினேன். பத்திரிகையின் இந்தப் பக்கத்தைப் படித்தேன். பதில் எழுத புத்தகங்களைப் பார்க்கிறேன். ஒரு மறுப்பு எழுதுகிறேன். அது மிகவும் போலியாகத் தெரிந்தது. உடனே கிழித்துப் போட்டேன். இன்னொரு மறுப்பு எழுதினேன். அதையும் கிழித்துப் போட்டேன். இவ்வாறே இரவு கழிந்தது. உங்களுக்கு என்ன ஆனது? வாருங்கள்; வந்து உறங்குங்கள் என்று மனைவி கூறினார். இவ்வாறே கடைசியில் சுபுஹ் பாங்கும் சொல்லப்பட்டு விட்டது. எதுவுமே எழுத முடியவில்லை. ஒவ்வொரு வார்த்தையும் எழுதிய போது எனக்கு அது தவறாகவே பட்டது. ஜமாஅத் பத்திரிகை என்றால் அது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டவை தான்.

பிறகு அவர் ஷாஹ் சாஹிபைப் பார்த்து கூறினார். நான் உங்களிடம் வாக்களிக்கிறேன். இனி ஒரு வார்த்தை உங்களை எதிர்த்துப் பேச நீங்கள் கேட்கமாட்டீர்கள். நீங்கள் கூறுவது முழுக்க முழுக்க இஸ்லாம் தான். நீங்கள் சுதந்திரமாக தப்லீக் செய்யுங்கள். கேட்பவர்களிடம் நான் உங்களைப் பற்றி நல்ல வார்த்தைகளையே கூறுவேன். ஆனால் நான் உங்கள் பிரிவில் சேரமாட்டேன். அவர் கடைசி வரை ஜமாஅத்தைப் புகழ்ந்து கொண்டே தான் இருந்தார்.

இப்போது நான் குத்பா இல்ஹாமியாவின் சில மேற்கோள்களை எடுத்து வைக்கிறேன். அதிலிருந்து அதன் தத்துவம் விளங்கும் என்று நான் ஏற்கனவே கூறினேன். முழுவதுமாக படித்தாலே புரிய வரும்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அரபியில் கூறினார்கள்:***

أَيُّهَا النَّاسُ إِنِّي أَنَا
الْمَسِيحُ الْمُحَمَّدِيُّ - وَإِنِّي أَنَا أَحْمَدُ الْمَهْدِيُّ -
وَإِنَّ رَبِّي مَعِيَ إِلَى يَوْمِ لَحْدِي مِنْ يَوْمِ مَهْدِي -
وَإِنِّي أُعْطِيتُ ضِرَامًا أَكَّالًا - وَمَاءً زُلَالًا -
وَأَنَا كَوْكَبٌ يَمَانِيٌّ - وَوَابِلٌ رُوحَانِيٌّ - إِيذَائِي
سِنَانٌ مُذَرَّبٌ - وَدُعَائِي دَوَاءٌ مُجَرَّبٌ - أُرِي
قَوْمًا جَلَالًا - وَقَوْمًا آخَرِينَ جَمَالًا - وَبِيَدِي
حَرْبَةٌ أُبِيدُ بِهَا عَادَاتِ الظُّلْمِ وَالذُّنُوبِ - وَفِي
الْأُخْرَى شَرْبَةٌ أُعِيدُ بِهَا حَيَاةَ الْقُلُوبِ

*மக்களே! நான் முஹம்மதிய இயக்கத்திலுள்ள மஸீஹ் ஆவேன். நான் அஹ்மத் மஹ்தி ஆவேன். உண்மையில் எனது ரப் என்னுடன் இருக்கிறான். சிறு வயதிலிருந்து எனது கபர் வரை ஒரு நெருப்பு கிடைத்துள்ளது. அது இனிமையான நீர் ஆகும். நான் ஈமானிய நட்சத்திரம் ஆவேன். ஆன்மீக மழையாவேன்.*

*எனக்கு கவலை கொடுப்பது கூரிய ஈட்டியைப் போன்றதாகும். எனது துஆ கை கண்ட மருந்தாகும். நான் ஒரு சமுதாயத்திற்கு எனது கம்பீரத்தைக் காட்டுகிறேன். இன்னொரு சமுதாயத்திற்கு மென்மையைக் காட்டுகிறேன். எனது கையில் ஓர் ஆயுதம் உள்ளது. அதனைக் கொண்டு நான் அநீதியையும் பாவத்தின் வழக்கத்தையும் அழிக்கிறேன். இன்னொரு கையில் பானம் இருக்கிறது. அது கொண்டு உள்ளங்களை மீண்டும் உயிரூட்டுகிறேன்.*

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

اَيُّهَا النَّاسُ قُوْمُوا لِلّٰهِ زُرَافَاتٍ وَفُرَادٰى فُرَادٰى -
ثُمَّ اتَّقُوا اللّٰهَ وَفَكِّرُوا كَالَّذِىْ مَابَخِلَ وَمَاعَادٰى -
اَلَيْسَ هٰذَا الْوَقْتُ وَقْتَ رُحْمِ اللّٰهِ عَلَى العِبَاد -
وَوَقْتَ دَفْعِ الشَّرِّ وَتَدَارُكِ عَطْشِ الاَكْبَادْ
بِالعهاد - اَلَيْسَ سَيْلُ الشَّرِّ قَدْبَلَغَ اِنْتِهَاءَهُ -
وَذَيْلُ الْجَهَلِ طَوَّلَ اَرْجَاءَهُ - وَفَسَدَ المُلْكُ
كُلُّهُ وَشَكَّرَ اِبْلِيْسُ جُهَلَاءَهُ - فَاشْكُرُوا اللّٰهَ الَّذى
تَذَكَّرَكُمْ وَتَذَكَّرَ دَيْنَكُمْ وَمَا اَضَاعَهُ - وَعَصَمَ
حَرْثَكُمْ وَزَرْعَكُمْ وَلُعَاعَهُ - وَاَنْزَلَ المَطَرَ
وَاَكْمَلَ اَبْضَاعَهُ - وَبَعَثَ مَسِيْحَهُ لِدَفْعِ
الضَّيْر - وَمَهْدِيَّهُ لِاِفَاضَةِ الخَيْرْ - وَاَدْخَلَكُمْ
فِى زَمَانِ اِمَامِكُمْ بَعْدَ زَمَانِ الغَيْرْ

*மக்களே ! இறைவனுக்காக பயந்து கூட்டாகவோ தன்னந்தனியாகவோ கருமித்தனம் காட்டாத எதிர்க்காத மனிதரைப் போன்று சிந்தியுங்கள். இது இறைவன் அடியான் மீது கருணை காட்டும் காலமில்லையா ? தீமையை அழிக்கும் காலமில்லையா ? வறண்டு போன உள்ளங்கள் ஆன்மீக மழையில் நனைய வேண்டாமா ? தீமையின் வெள்ளம் அதன் எல்லையைத் தொடவில்லையா ? அறியாமை மூலை முடுக்குகள் வரை பரவவில்லையா ? நாடு தீமையில் ஆழ்ந்து விட்டது. ஷய்த்தான் மூடர்களுக்கு நன்றி செலுத்தினான். உங்களை நினைவில் கொண்ட அந்த இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள். அவன் உங்கள் மார்க்கத்தை நினைவில் கொண்டான். உங்களை வீணாவதிலிருந்த பாதுகாத்தான். நீங்கள் விதைத்ததையும் உங்கள் விவசாயத்தையும் ஆபத்துகளிலிருந்து காப்பாற்றினான். மழையை இறக்கி அதன் அறுவடைக்குத் தயாராக்கினான். அவனது உதவியை முழுமைப்படுத்தினான். தமது மஸீஹை இடர்களை அகற்றவும் தனது மஹ்தியை நன்மையையும் இலாபத்தையும் கொண்டு வருவதற்காகவும் அனுப்பினான். மற்றவர்களின் காலத்திற்குப் பின்னர் உங்களை உங்கள் இமாமின் காலத்தில் இணைத்துள்ளான்.*

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:***

وَاِنِّـي عَلٰـى مُقَامِ
الْخَتْمِ مِنَ الوِلَايَة - كَمَـا كَـانَ سَيِّدِى الْمُصْطَفٰى
عَلٰى مُقَامِ الْخَتْمِ مِنَ النُّبوة - وَاِنَّهُ خَاتَمُ الانبياء -
وَاَنَا خَاتَمُ الاَوْلِيَاء - لَاوَلِيَّ بَعْدِى - اِلّا الَّذِى هُوَ
مِنِّى وَعَلٰى عَهْدِى - وَاِنِّى اُرْسِلْتُ مِنْ رَّبِّى بِكُلِّ
قُوَّةٍ وَبَرَكَةٍ وَعِزَّةٍ - وَاِنَّ قَدَمِىَ هٰذِهِ عَلٰى
مَنَارَةٍ خُتِمَ عَلَيْهَا كُلُّ رِفْعَةٍ - فَاتَّقُوا اللّٰه اَيُّهَا
الْفِتْيَانُ - وَاَعْرِفُوْنِى وَاَطِيْعُوْنِى وَلَا تَمُوْتُوا
بِالْعِصْيَانْ - وَقَدْ قَرُبَ الزَّمَانْ - وَحَانَ اَنْ
تُسْئَلَ كُلُّ نَفْسٍ وَتُدَانَ

*நான், நமது தலைவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நுபுவ்வத்தின் தொடரை முடித்து வைத்தது போன்று விலாயத்தின் தொடரை முடிப்பவனாவேன். அவர் காத்தமுல் அன்பியா ஆவார்கள். நான் காத்தமுல் அவ்லியா ஆவேன். எனக்குப் பிறகு எந்த வலியும் இல்லை. ஆனால் எவர் என்னுடன் இருப்பாரோ எனது உடன்படிக்கையில் உறுதியாக இருப்பாரோ அவரை தவிர. நான் இறைவன் புறமிருந்து எல்லா விதமாக ஆற்றல்களுடனும், அருளுடனும், கண்ணியத்துடனும் அனுப்பப்பட்டுள்ளேன். எனது பாதம் எல்லா உயரங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளேன். மிக உயர்ந்த மினராத்தில் உள்ளது. ஆண்களே ! இறைவனுக்கு அஞ்சுங்கள். என்னைக் கண்டறியுங்கள் ! எனக்கு கட்டுப்படாமை காட்டாதீர்கள். மேலும் கட்டுப்படாமையில் மரிக்காதீர்கள். காலம் அருகில் வந்து விட்டது. ஒவ்வொரு உயிரும் தனது பணிகளுக்காக கேட்கப்படும். கூலி கொடுக்கப்படும் நேரம் வந்து விட்டது. இதுவே மகத்தான அடையாளமும், மகத்தான வார்த்தைகளும் ஆகும். இது ஓர் அழைப்பாகும்.*

இதனை அன்னார் இறை கட்டளையினால் செய்தார்கள். இல்ஹாம் மூலம் இந்த அழைப்பை விடுத்தார்கள். இந்த அடையாளம் நான் கூறியது போன்று **11** ஏப்ரல் **1900** **–**ல் வெளிப்பட்டது. இன்று வரை அந்த அடையாளம் தனது ஒளியைக் காட்டுகிறது. இன்று வரை எந்த மொழியியல் அறிஞரும், ஆலிமும், அரபுலகத்தில் வாழ்பவர்களும் இதற்கு எதிரில் நிற்க முடியவில்லை. எவ்வாறு நிற்க முடியும்**?** இது இறை வார்த்தையாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நாவினால் வெளிப்பட்டது. குறிப்பாக, அல்லாஹ் உலகிற்கு அரபு நாட்டு முஸ்லிம்களுக்கு அறிவையும் துணிவையும் வழங்குவானாக! அவர்கள் இறைவனது தேர்ந்தெடுக்கப்பட்டவரை விளங்கட்டும்! முஸ்லிம் உம்மத்தை இன்று மீண்டும் உம்மத்தே வாஹிதாவாக ஆக்குவதற்கு இந்த நபி (ஸல்) அவர்களுடைய உண்மையான அடியாருக்கு உதவியாளராகுங்கள். அல்லாஹ் நமக்கும் நமது பொறுப்பை நிறைவேற்ற வாய்ப்பு வழங்குவானாக!

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் இரண்டு ஜனாஸா தொழ வைப்பேன். ஒன்று, கண்ணியத்திற்குரிய சவுத்ரி பஷீர் அஹ்மது சாஹிப் உடைய மனைவி உடையது. இவர் பட்டிபோடு செக்பூரா மாவட்டத்தைச் சேர்ந்தவர். **3**

ஏப்ரல் 2014 அன்று தனது 84வது வயதில் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் 1953 –ல் ஒரு கனவில் அடிப்படையில் ஜமாஅத்தில் இணையும் நற்பேறு பெற்றார். ஜல்ஸா ஸாலானா ரப்வாவில் அவர் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களைக் கனவில் பார்த்தார். கனவில் பைஅத் செய்யுமாறு கூறிய பெரியவர் இவர் தான் என்றார். இவரது சகோதரி, சகோதரர்களுள் இவர் ஒரே அஹ்மதியாவார். ஐவேளை தொழுபவர். தஹஜ்ஜுத் தொழுபவர். துஆ செய்பவர். ஏழைகளைப் பராமரிப்பவர். நேர்மையான உள்ளம் கொண்ட களங்கமற்ற பெண் ஆவார். ஜமாஅத்துடன் தூய்மையான தொடர்பு கொண்டிருந்தார். பொறுப்பாளர்களுக்கு மிகவும் மதிப்பளிப்பார். இவரது நினைவாக கணவர் தவிர இரு மகள்கள். ஐந்து மகன்கள். அவரது ஒரு மகன் கண்ணியத்திற்குரிய முஹம்மது அப்ஸல் பட்டி சாஹிபை ஜாமிஆ அஹ்மதிய்யாவுக்கு அனுப்பினார். அவர் தன்ஸானியாவில் முபல்லிக் ஆக உள்ளார். அவரால் பணிக்களத்தில் இருப்பதால் தாயாரின் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை. அல்லாஹ் மர்ஹூமாவின் தகுதியை உயர்த்வானாக! அவரது மகனுக்கும் பொறுமையை வழங்குவானாக! எவர் செயற்களத்தில் மார்க்கப் பணியாற்றிக் கொண்டிருக்கிறாரோ அந்த மகனுக்கு அல்லாஹ் பொறுமையை வழங்குவானாக!

இரண்டாவது ஜனாஸா கராச்சியைச் சேர்ந்த கண்ணியத்திற்குரிய செய்யது மஹ்மூது அஹ்மது ஷாஹ் சாஹிப் உடையது. இவர் 29 மார்ச் 2014 –ல் இதயத்துடிப்பு நின்று போனதால் வஃபாத் ஆனார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் வீட்டில் இருந்த போது, உளு செய்து விட்டு அஸர் தொழுகைக்காக அறைக்குள் சென்றார். நீண்ட நேரம் எதிர்பார்ப்பிற்குப் பிறகு மனைவி அறையில் சென்று பார்த்த போது தொழுகை விரிப்பு விரிக்கப்படாமல் மடிக்கப்பட்டிருந்தது. ஒருவேளை தொழுகையை முடித்திருக்கலாம் அல்லது தொழுவதற்கு முன்பு கூட நடந்திருக்கலாம். தொழுகை விரிப்பில் கிடந்தார்கள். படுக்கையில் போட்டார்கள். ஆம்புலன்ஸ் வந்தது. கவனித்த போது வஃபாத் ஆகியிருந்தார். அவர் ஸய்யத் நாஸிர் ஹுஸைன் சாஹிப் என்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சிற்றன்னை மகனாகிய சகோதரர் அப்துல்லாஹ் ஷாஹ் சாஹிப் உடைய மருமகன் ஆவார். மிகவும் பரிவு கொண்டவர். நல்லவர். துஆ செய்பவர். ஜமாஅத் அமைப்பு மற்றும் கிலாஃபத்துடனும் மிகவும் அன்பான தொடர்பு கொண்டிருந்தவர். ஜமாஅத் பணிகளில் பல்வேறு பொறுப்புகளை நீண்ட காலமாக செய்யும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார். தஹஜ்ஜுத் தொழுபவர். தொழுகைகளைப் பேணுபவர். முறையாக வக்ஃபே ஆர்ஸி செய்பவர். ஜல்ஸா ஸாலானாவுக்காக மிகவும் ஏக்கத்துடன் எதிர்பார்த்திருந்து இங்கு வருவார். ஜல்ஸாவில் கலந்து கொள்வதில் மிகவும் ஆர்வம் இருந்தது. நீண்ட காலம் கராச்சியில் தமது பகுதியில் வஸிய்யத் செயலராக தொண்டாற்றும் வாய்ப்பு பெற்றிருந்தார். இவர் மூஸி ஆவார். மனைவி தவிர ஒரு மகள், 4 மகன்களை நினைவாக விட்டுச் சென்றுள்ளார். பாகிஸ்தானுக்கு வெளியே தான் எல்லாரும் உள்ளனர். ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ளனர். இவரது இரண்டு சகோதரர்கள் இங்கு வசிக்கின்றனர். இன்றைய நாட்களில் ஸய்யத் நஸிர் ஷாஹ் சாஹிப் U.K. –ல் திருமணத் துறையின் இன்சார்ஜ் ஆக உள்ளார்கள். அல்லாஹ் இவரை மன்னிப்பானாக! கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர், தமது பின்னால் விட்டுச் சென்றுள்ளவர்களுக்கும் பொறுமை, தைரியத்தை வழங்குவானாக! அவரது நன்மைகளை தொடர நல்வாய்ப்பினை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**பிழை திருத்தம்**

*சென்ற (04.04.2014) குத்பாவின் கடைசிப் பக்கத்தின் முதல் மற்றும் இரண்டாம் வரிகளில் 'வாள்' என்று தவறுதலாக அச்சாகியுள்ளது. இதனை சகோதரர்கள் 'தொழுநோய்' என்றும், அதே பக்கத்தில் முதல் பாராவின் முதல் வரியில் 'இரசிப்போ' என்பதற்குப் பதிலாக 'இரட்சிப்போ' என்றும் திருத்தி வாசிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.*


**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **11.04.2014**

Translated by : Muallim M. NIZAMUDEEN Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA

ASHURA EAST STREET, MELAPALAYAM,

TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456